# இராணிப்பேட்டை நகராட்சி

2024ம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி புதன்கிழமை நண்பகல் 11.30 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 31.01.2024 | **பொருள் எண்.1**<br>இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் நவம்பர் 2023 மற்றும் டிசம்பர் 2023–ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண்.1193/2022/சி1** | நகரமன்ற தீர்மானம் எண்,547 பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது |
| 31.01.2024 | **பொருள் எண்.2**<br>இந்நகராட்சியின் நகரமன்ற தீர்மான எண்.432 நாள் 31.07.2023–ல் நிர்வாக அனுமதி அளித்துள்ளதின்பேரில் இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு பொதுநிதியின் கீழ் பிளிச்சிங் பவுடர் மற்றும் நீர்த்திய சுண்ணாம்பு தூள் சப்ளை செய்யும் பணிக்கு பெறப்பட்ட கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் எண்,548 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ எண் | பொருள் விவரம் | R.J.S Construction எண்.45எல்.ஆர். நிலையம்,நவல்பூர், இராணிப்பேட்டை, அளித்துள்ள ஒரு கிலோ விலை விகிதம் | கே.இராமமூர்த்தி 290/2,Vinayagar Kovil Street, Vallar Nagar, Navalpur, Ranipet அளித்துள்ள ஒரு கிலோ விலை விகிதம் | Er.G.S.Beeshmachari. No.6/1, Bazzar street, Opp. Taluk Office, Walajapet அளித்துள்ள ஒரு கிலோ விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பிளிச்சிங் பவுடர் | ரூ.40/– (GST உட்பட) | ரூ.48/– (GST உட்பட) | ரூ.52/– (GST உட்பட்) |
| 2 | நீர்த்திய சுண்ணாம்பு தூள் | ரூ.9/– (GST உட்பட) | ரூ.12/– (GST உட்பட) | ரூ.19/– (GST உட்பட்) |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலககுறிப்பு</u>**<br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள R.J.S.Construction எண்.45,எல்.ஆர்.நிலையம், நவல்பூர், இராணிப்பேட்டை என்பவர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>3)மேற்படி செலவினம் 2023–24 ஆம் ஆண்டு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண்.2560/2022 /எச்1 | |
| 31.01.2024 | **<u>பொருள் எண். 3</u>**<br>மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் அளித்த விண்ணப்பங்களை மக்களுடன் முதல்வர் இணையதளத்திலும், மற்றும் cmhelpline இணையதளத்திலும் பதிவேற்றம் செய்வதற்கு நகராட்சி சார்பில் 7 முதல் 10 கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் சார்பில் 13 துறை சார்ந்த அலுவலர்களின் கணினிகள் மற்றும் பிரிண்டர்களுக்கும் தங்குதடையின்றி இணையதள சேவை கிடைக்க அனைத்து கணினிகளையும் நெட்வொர்க்கிங் மூலம் இணைத்திடும் பணி செய்திடவும், இணையத்தள சேவை கட்டணம் செலுத்திடவும் தோராய செலவினம் ரூ.2,00,000/–ற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண்.2372/ 2023/இ1** | நகரமன்ற தீர்மானம் எண்,549<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 31.01.2024 | **<u>பொருள் எண். 4</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் பொதுமக்களிடம் பெறப்படும் விண்ணப்பங்களை மக்களுடன் முதல்வர் இணையதளத்திலும், மற்றும் cmhelpline இணையதளத்திலும் பதிவேற்றம் செய்வதற்கு நகராட்சி சார்பில் 7 முதல் 10 கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் சார்பில் 13 துறை சார்ந்த அலுவலர்களின் கணினிகள் மற்றும் பிரிண்டர்களுக்கும் தங்குதடையின்றி இணையதள சேவை கிடைக்க அனைத்து கணினிகளையும் நெட்வொர்க்கிங் மூலம் இணைத்திடும் பணிக்கு 12.12.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் 550<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| பணியின் விவரம் | GoodLuck Computers, Thirupattur | V-Tech Computers. Arcot | Sakthi Soft Computers. Thrupattur. |
|---|---|---|---|
| மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் 6 முகாம்கள் நடைபெறும் இடங்களில் கணினி இணையதள சேவை மற்றும் கணினிகளை இணைத்திடும் நெட்வொர்கிங் பணி | ரூ.1,23,204/- | ரூ.1,34,178/- | ரூ.1,44,031/- |

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் வழங்கியுள்ள M/S.Good Luck Computers, திருப்பத்தூர் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கும், தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.2372/ 2023/இ1**

31.01.2024

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்கு சொந்தமான கடை வாடகைதாரர்களிடமிருந்து வசூல் செய்யப்படும் சரக்குகள் மற்றும் சேவை வரியினையும் இந்நகராட்சி ஒப்பந்ததாரரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் சரக்குகள் மற்றும் சேவை வரியினையும் Online–ல் மத்திய கலால் வரித்துறை சிப்காட், இராணிப்பேட்டை அவர்களுக்கு செலுத்துவதற்கும் அதனை ஒவ்வொரு மாதமும் **GST Return** செய்வதற்கான பணிக்கு 05.12.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | Global Associates, Ranipet | ரூ.3540/- |
| 2 | P.R Enterprises , Walajapet | ரூ.5900/- |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் காணும் M/S. Global Associates, Ranipet என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்கவும் மேற்படி பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.50,000/–க்கு பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

நகரமன்ற தீர்மானம் எண்,551
அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>2. நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Global Associates, Ranipet என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>ந.க.எண்.2086/2011/அ3 | |
| 31.01.2024 | **<u>பொருள் எண். 6</u>**<br>இந்நகராட்சியில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் பொது மக்கள் குறைகளை உடனுக்குடன் தீர்க்கும் வகையில் 6 எண்ணிக்கையில் முகாம்களை நகராட்சி பகுதிகளில் நடத்த மாவட்ட ஆட்சியர் மூலம் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து முகாம்களில் தற்காலிக மின்பணிகள், மின்விளக்குகள், குடிநீர் வசதி, கேபிள் நெட் ஒர்க், எழுது பொதுட்கள், முகாம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த ஆட்டோ விளம்பரம், பேனர்கள் தன்னார்வலர்களுக்கு வழங்க வேண்டிய தொகை மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ஏற்கனவே நகரமன்ற தீர்மானம்எண்.543 நாள் 30.11.2023 ரூ.6,00,000/-(ஆறு இலட்சம்) மட்டும் அனுமதித்துள்ளதின் பேரில் கூடுதல் செலவாக கலந்து கொண்டு அனைத்து அலுவலர்களுக்கும் காலை மற்றும் மதியம் உணவு வழங்கவும் மற்றும் இதர கூடுதல் செலவுகளுக்காக ஆகும் தோராய மதிப்பீட்டு தொகை ரூ.3,00,000/- ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேலும் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணிமேற்கொண்டமைக்கும் செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண்.2372 /2023/இ1 | நகரமன்ற தீர்மானம் எண்,552<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 31.01.2024 | **<u>பொருள் எண். 7</u>**<br>இந்நகராட்சியில் பணிப்புரியும் தூய்மைப்பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், மருத்துவ உதவியாளர்கள் மற்றும் சங்கிலியளர்கள் ஆகியவர்களுக்கு 2024ம் வருடத்திற்குண்டான சீருடைகளை கோ ஆப்டெக்ஸ், வேலூர் என்ற அரசு கூட்டுறவு நிறுவனத்தில் வாங்கவும் மற்றும் காலணிகளை SIDCO நிறுவனத்திடமிருந்து நேரடியாக வாங்கி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் எண்,553<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதியளிக்கலாம்.
2. இந்நகராட்சியில் பணிப்புரியும் தூய்மைப்பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், மருத்துவ உதவியாளர்கள் மற்றும் சங்கிலியாளர்கள் போன்ற பணியாளர்களுக்கு 2024ம் வருடத்திற்குண்டான சீருடைகள் , தையற்கூலி மற்றும் காலணிகளை வாங்கி வழங்க வேண்டி மன்ற ஒப்புதல் எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2523/2023/எச்1

---

31.01.2024

**<u>பொருள் எண். 8</u>**

இராணிப்பேட்டை நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2023–24ன் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.1254/2023/இ1 நாள் 08.12.2023ன் படி மின்னனு (E–Tender Online /Offline) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 27.12.2023 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை தேர்வான ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளியினை (PRICE BID) 27.12.2023 அன்று திறக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு.

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.22 அம்பேத்கர் தெருவில் புதியதாக கழிப்பிடம் கட்டுதல். | 9.90 | திரு.பி.விக்னேஷ்வரன், நெ,11,பி.வி.கே.தெரு, காரை, இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.03 % குறைவு |
| | | | RJS Construction நெ.45, எல்.ஆ.நிலையம், ஒத்தவாடைத்தெரு, நவல்பூர், இராணிப்பேட்டை. | மதிப்பீட்டை விட 0.86 % அதிகம் |
| 2 | வார்டு எண்.16 எஸ்.எம்.எச். பின்புறம் புதியதாக கழிப்பிடம் கட்டுதல். | 9.65 | திருமதி.ஆர்.செல்வராணி நெ.3/976, திருவள்ளுவர் நகர், நவலாக், புளியங்கண்ணு. | மதிப்பீட்டை விட 0.02 % குறைவு |

நகரமன்ற தீர்மானம் எண்,554
அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திரு.பி.சிவசங்கர்,<br>நெ,45,2வது தளம்<br>ஒத்தவாடைத் தெரு,<br>நவல்பூர்,<br>இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 1.23 % அதிகம் |

**அலுவலககுறிப்பு**

மேற்காணும் இரண்டு பணிகளுக்கு மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை சமர்பித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதியளிக்கலாம்

ந.க.எண் . 1254/2023/இ1

31.01.2024

**பொருள் எண். 9**

. அரசாணை (நிலை) எண்.181, நாள்.19.09.2008–ன் படி இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்களான 10 இனங்களுக்கு 31.03.2024–வுடன் மூன்றாண்டு குத்தகை காலம் முடிவடைவதால் 2024–2025 முதல் 2026–2027 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விட வேண்டியுள்ளது. மேற்படி, அரசாணையில் தெரிவித்துள்ளவாறு ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாமாண்டில் 5% குத்தகை தொகை உயர்வு செய்யவும் மூன்றாம்மாண்டில் முந்தைய ஆண்டில் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி கீழ்காணும் குத்தகை இனங்களுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறவும் மற்றும் பகிரங்க பொது ஏலம் விடவும் அதற்கான விளம்பர அறிக்கையினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் குத்தகை இனங்களின் ஏல நிபந்தனைகளை இராணிப்பேட்டை மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடு செய்யவும் மேற்படி அறிக்கை அச்சிட மற்றும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

நகரமன்ற தீர்மானம் எண்,555 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**மூன்று ஆண்டு குத்தகைகள் 01.04.2024 முதல் 31.03.2027 முடிய உரிமம் விவரம்:–**

| வ.எண் | குத்தகை விவரம் | ஏலப் பொறுப்புத் தொகை ரூ | சொத்து மதிப்பு சான்று 01.01.2024 –க்கு பிறகு பெற்ற சான்று ரூ | சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1 | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பாலாற்றங்கரையில் உள்ள நகராட்சிக்கு உரிமையுடைய திறந்த வெளி கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து தோல் தொழிற்காலைகளுக்கு நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யும் உரிமம். | 5,00,000/- | 20,00,000/- | 8,00,000/- | | |
| | 2 | இராணிப்பேட்டை வாரச்சந்தையில் நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டண விகிதத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் குப்பை சாணம் உரிமம் மற்றும் குப்பை சாணம் அகற்றிக்கொள்ளும் உரிமம் (உழவர் சந்தை நீங்கலாக) | 4,00,000/- | 20,00,000/- | 8,00,000/- | | |
| | 3 | தினசரி சந்தை | 3,00,000/- | 15,00,000/- | 4,00,000/- | | |
| | அ<br><br><br><br>ஆ | இந்நகராட்சிக்கு சொந்தமான பஜார் தெருவில் அமைந்துள்ள 13 கடைகளில் நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டு இருக்கும் தினசரி குத்தகை கட்டணங்களை வசூலிக்கும் உரிமம்<br>இந்நகராட்சிக்கு சொந்தமான ஆர்.ஆர்.சாலையில் (காவல் நிலையம் போகும் பாதையில்) வலது பக்கத்தில் சர்வே எண்.6-ல் சுமார் 0.5732 சதுர மீட்டர் நிலப்பரப்பில் அமைந்துள்ள அம்பேத்கர் கடைகள் 6 இதே வளாகத்தில் அமைந்துள்ள 'A' பிளாக்கில் 26 கடைகள் இதே பக்கத்தில் ஜெயம் தியேட்டருக்கு அருகில் உள்ள ஆர்.எம்.எஸ்.ராஜன் அங்காடியிலுள்ள 6 கடைகள் அங்கீகரிக்கப்பட்ட கடைகளிலிருந்து இது தவிர அங்காடிக்கு சரக்கு கொண்டு வரும் மற்றும் சரக்கு ஏற்றிச் செல்லும் | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | இ | லாரிகள், வேன்கள், மாட்டுவண்டிகள் மற்றும் இதர வாகனங்கள் ஆகியவற்றிற்கு நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டு இருக்கும் தினசரி குத்தகை கட்டணங்களை வசூலிக்கும் உரிமை. இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலை ஓரங்களில் உள்ள திறந்த வெளியில் தினசரி வியாபாரம் செய்து கொள்பவர்ளிடமிருந்து நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டு இருக்கும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (உழவர் சந்தை நீங்கலாக) | | | | | |
| | 4 | இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்திற்கு வந்து போகும் தனியார் மற்றும் அரசுப் பேருந்துகளுக்கு நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டண விகிதத்தில் கட்டணம் வசூல செய்யும் குத்தகை உரிமம். | 2,00,000/- | 10,00,000/- | 4,00,000/- | | |
| | 5 | இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குள் உள்ள இ.ஐ.டி பாரி கம்பெனி சர்வே எண்.1-ல் இ.ஐ.டி பாரியின் பிரதான சாலையினை ஒட்டி அமைந்துள்ள இடத்தில் லாரி போன்ற வாகனங்களை நிறுத்தும் இடத்தில் நிற்கும் வாகனங்களிடமிருந்து நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டண விகிதத்தில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம். | 1,00,000/- | 5,00,000/- | 3,00,000/- | | |
| | 6 | இராணிப்பேட்டை நகராட்சிக்குச் சொந்தமான ஆடு அறுக்கும் தொட்டியில் நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டண | 1,00,000/- | 3,00,000/- | 1,50,000/- | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | விகிதத்தில் கட்டணம்/ வசூலிக்கும் உரிமம். | | | |
| 7 | இந்நகராட்சிக்கு சொந்தமான காரை காலணி சுடுகாடு சாலையில் மாடு அடிக்கும் கட்டிடத்தில் நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டண விகிதத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 15,000/- | 1,00,000/- | 10,000/- |
| 8 | இராணிப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான முத்துகடை பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டண விகிதத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1,00,000/- | 3,00,000/- | 1,00,000/- |
| 9 | வாரச்சந்தைக்குட்பட்ட பகுதியில் நவீன கட்டணக் கழிப்பிடத்தில் நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டண விகிதத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 25,000/- | 1,00,000/- | 10,000/- |
| 10 | இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை பகுதியில் உள்ள மீன் விற்பனை அங்காடி நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டண விகிதத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 4,00,000/- | 20,00,000/- | 8,00,000/- |

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. வரிசை எண்.1 முதல் 10 வரையிலான குத்தகை இனங்களுக்கு 2024-2025 முதல் மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விடவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளின் படி ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாமாண்டில் 5% குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் குத்தகை தொகையில் 5% குத்தகை தொகை உயர்வு செய்தும் 2024-2025 ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை விட மன்றம் அனுமதிக்கலாம்.

<table>
<tr>
<td></td>
<td>
3. குத்தகை ஆண்டு காலம் மூன்று ஆண்டுகளாக உள்ளதால், குத்தகை எடுக்கப்பட்ட குத்தகைதாரரால் குத்தகை எடுக்கப்பட்ட வருடத்தின் முழு குத்தகைத் தொகையினையும் முந்தைய ஆண்டு பிப்ரவரி 15–ம் தேதிக்குள் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தாத பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்புமின்றி குத்தகை ரத்து செய்து மறு ஏலம் விடவும் அதனால் ஏற்படும் இழப்பீட்டிற்கு குத்தகைதாரரை முழுப் பொறுப்பாக்கி சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
4. மேற்படி குத்தகை இனங்களுக்கு விளம்பரம் செய்யவும் மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடு செய்யவும் அதற்கான அறிக்கை அச்சிட ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
5. மேலும் குத்தகை இனங்களை குத்தகைதாரர்கள் 2024–2025–ம் ஆண்டு முதல் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு அனுபவிக்க இருப்பதால் குத்தகைதாரர்கள் செலுத்த வேண்டிய ஏலப் பொறுப்புத் தொகைகளையும் மற்றும் கட்டண விகிதங்களையும் உயர்த்த மன்றம் அனுமதிக்கலாம்.<br>
6. குத்தகைதாரரிடம் குத்தகை தொகையுடன் சேர்த்து செலுத்தும்படியாக ஒரு (1%) சதவீதம் வருமானவரி மற்றும் தொழில் வரி வசூலிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
(ந.க.எண்.1888/2023/அ3)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.01.2024</td>
<td>
<u>பொருள் எண். 10</u><br>
இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்டுள்ள வார்டு பகுதிகளில் உள்ள பணிகளை நகராட்சி பொதுநிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள பணிகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை<br>(ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கெல்லீஸ் சாலையில் கழிவு நீர் செல்ல வடிகால் வசதி அமைத்தல்.</td><td>ரூ.1.80</td></tr>
<tr><td>2</td><td>வார்டு எண்.11 பிஞ்சி சமுதாய கழிப்பறையில் கழிவு நீர் நச்சு தொட்டி அமைத்தல்</td><td>ரூ.1.50</td></tr>
<tr><td>3</td><td>MBT சாலையில் பழுதடைந்துள்ள கால்வாய் பகுதிகளில் 450mm விட்டமுள்ள RCC குழாய் அமைத்தல்</td><td>ரூ.1.70</td></tr>
<tr><td>4</td><td>வார்டு எண்.24 புலித்தெரு குறுக்கு சந்தில் ஆழ்துளை குழாய் கிணறுடன் மின்விசை பம்ப் அமைத்தல்.</td><td>ரூ.2.10</td></tr>
<tr><td>5</td><td>வார்டு எண்.12ல் பாஷாசாகிப் தெருவில் சிறுபாலம் மற்றும் கால்வாய் சரிசெய்தல்</td><td>ரூ.1.50</td></tr>
</table>
</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,556<br>அலுவலக க்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>6</td><td>வார்டு எண்.14 அன்னை இந்திரா தெரு (பழைய LIC பின்புறம்) மழைநீர் வடிகால்வாய் அமைத்தல்</td><td>ரூ.1.60</td></tr>
<tr><td>7</td><td>வார்டு எண்.14 டி.எம்.என்.தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல்</td><td>ரூ.6.90</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதியளிக்கலாம்..<br>
(ந.க.எண். 0317/ 2024/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.01.2024</td>
<td>
<u>பொருள் எண். 11</u>.<br>
இராணிப்பேட்டை நகராட்சியில் பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.2773/2023/இ1 நாள் .12.2023ன் படி மின்னனு (E–Tender Online /Offline) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 05.01.2024 அன்று பெறப்பட்ட தேர்வான ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை 05.01.2024 அன்று திறக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">நகராட்சியின் வாரச்சந்தை பகுதியில் உள்ள MCCயில் ஷேர்டரிங் இயந்திரத்திற்கு தானியங்கி கன்வேயர் அமைத்தல் பணி</td><td rowspan="2">2.10</td><td>M/s..ராமுஎண்டர்பிரைசஸ், நெ.5/61, கருங்காலக்குடி, மேலூர் 625 106</td><td>மதிப்பீட்டை விட 0.07 % குறைவு</td></tr>
<tr><td>M/s கதிர் எண்டர்பிரைசஸ், திருப்பத்தூர் ரோடு, சிங்கம்புனேரி, சிவகங்கை 630 502</td><td>மதிப்பீட்டை விட 0.36 % அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">இராணிப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த கட்டிடத்தில் நாய்கள் கருத்தடை மையம் அமைக்கும் பணி</td><td rowspan="2">3.00</td><td>தணிகைவேல், நெ.50, பிள்ளையார் கோவில் தெரு, காட்டுப்பாக்கம், நெமிலிவட்டம்</td><td>மதிப்பீட்டை விட 0.08 % குறைவு</td></tr>
<tr><td>பி.பழனி, நெ.302/2, தண்டலம் ரோடு,</td><td>மதிப்பீட்டை விட 0.40 % அதிகம்</td></tr>
</table>
</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,557<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | <table><tr><td></td><td></td><td></td><td>வள்ளலார் நகர்,<br>இராணிப்பேட்டை..</td><td></td></tr></table> **<u>அலுவலககுறிப்பு</u>**<br>மேற்காணும் பணிகளுக்கு மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை சமர்பித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதியளிக்கலாம்<br><br>(ந.க.எண் . 1275/2023/இ1) | |
| 31.01.2024 | **<u>பொருள் எண். 12</u>**<br>இந்நகராட்சி வார்டு எண்.22 வண்டிமேட்டுத்தெரு ஆர்.ஆர் ரோடுசந்திப்பில், பாரி கம்பெனி சந்திப்பு மற்றும் வார்டு எண்.13ல் ஆர்.எஸ்.ரோடு பகுதியில் உள்ள 3 உயர்கோபுர மின்விளக்குகள் தேசிய/மாநில நெடுஞ்சாலை விரிவாக்கம் செய்யப்பட்டதால் மேற்படி உயர் கோபுர விளக்குகள் சாலையில் அமைந்த காரணத்தினாலும், பொதுமக்கள் நலன் கருதியும், பணியின் அவசர அவசியம் கருதி உடன் இடமாற்றம் செய்ய ஒப்பந்ததாரர்கள் மூலம் உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய திரு.M.தணிகைவேல், ஒப்பந்ததரர் அவர்களின் மூலம் உடன் பணி மேற்கொள்ளப்பட்டது. பணியின் அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும், ஒப்பந்தாரரின் கோரிக்கையின் படி நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றத்தின் பின்னேற்ப்பிற்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை வழங்கியமைக்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>**<u>ந.க.எண் .1667/2023/இ1</u>** | நகரமன்ற தீர்மானம் எண்,558<br>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 31.01.2024 | **<u>பொருள் எண். 13</u>**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை 28 அவர்களின் செயல்முறை ஆணையின்படி இராணிப்பேட்டை நகராட்சியில் மூலதன மான்ய நிதி/இயக்கம் மற்றும் பராமரிப்பு மான்ய நிதி 2023–24–ன் கீழ் ரூ.290.00 இலட்சம் மதிப்பீட்டில் பாலாற்றில் உள்ள நீர் உறிஞ்சு கிணறுகளிலிருந்து இருந்து தலைமை நீரேற்று நிலையத்திற்கு புதியதாக குடிநீர் பிரதான குழாய் மற்றும் கேபிள் பதிக்கும் பணிக்கு 27.12.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப கூர்ந்தாய்வில் (Technical Bid ) தேர்வான ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளியினை (PRICE BID) 12.01.2024 அன்று திறக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு. | நகரமன்ற தீர்மானம் எண்,559<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>பணி விவரம்</th><th>மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில் )</th><th>ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்ட விலைப்புள்ளி (ரூ.இலட்சத்தில்)</th><th>வழங்கப்பட்ட விகிதம் (அதிகம்/குறைவு)</th></tr>
<tr><td>1</td><td>திரு.சங்கர்,<br>நெ.7, ரோட்டு தெரு,<br>சாய்நாபுரம் கிராமம் (ம) அஞ்சல்,<br>அரக்கோணம் தாலுக்கா.</td><td rowspan="2">290.00</td><td>27017474.95</td><td>0.02% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம்.தணிகைவேல்,<br>நெ.2, ஸ்ரீதேவி மீனாட்சி நகர், பெரியகுப்பம்,<br>திருவள்ளுவர் நகர்</td><td>27196130.24</td><td>0.64% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2.மேற்காணும் பட்டியலில் வரிசை எண். 1ல் கண்டுள்ள திரு.சங்கர்,என்பவர் அளித்துள்ள 0.02% குறைந்த ஒப்பந்த விலைப்புள்ளியை ஏற்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 1173/ 2023/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.01.2024</td>
<td>
<u>பொருள் எண். 14</u><br>
இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள வாகனங்களுக்கு 2024-2025ஆம் ஆண்டிற்கான வாகன காப்பீடு செலுத்த வேண்டியுள்ளதால் United India Insurance company limited, Ranipet என்ற நிறுவனத்தில் லாரி வாகன எண். TN73Q 9747 என்ற வாகனத்திற்கு காப்பீட்டு தொகை ரூ.42650/- மற்றும் The Oriental Insurance Company Limited, Ranipet என்ற நிறுவனத்தில் ஜேசிபி வாகன எண். TN23AX3073 என்ற வாகனத்திற்கு காப்பீட்டு தொகை ரூ.8635/-ஆக மொத்த தொகை ரூ.51,285/-ஐ மேற்படி காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u>
<ol>
<li>மன்றம் அனுமதி வழங்கலாம்.</li>
<li>லாரி வாகன எண். TN73Q 9747 மற்றும் ஜேசிபி வாகன எண். TN23AX3073 ஆகிய வாகனங்களுக்கு வாகன காப்பீட்டு செலுத்த வேண்டி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.</li>
<li>இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</li>
</ol>
</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,560<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | ந.க.எண். 2529/2020/எச்1 | |
| 31.01.2024 | **<u>பொருள் எண். 15</u>**<br>இந்நகராட்சியில் 26.01.2024 அன்று நடைபெற உள்ள குடியரசுதின விழாவிற்கு அழைப்பிதழ்கள் அச்சடித்து நகரமன்ற தலைவர், நகரமன்ற துணை தலைவர், நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் அனைவருக்கும் அழைப்பிதழ் சார்பு செய்ய அழைப்பிதழ் அட்டைகள் மற்றும் கவர்கள் அச்சடிக்க ஆகும் தோராய செலவினம் ரூ.10,000/-ற்கு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>2. நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் நிறுவங்களிலிருந்து விலைப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**ந.க.எண்**.252/2007/**பி**3 | நகரமன்ற தீர்மானம் எண்,561<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 31.01.2024 | **<u>பொருள் எண். 16</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ள நூலகத்துடன் கூடிய அறிவுசார் மையத்திற்கு தேவையான ஸ்டில் பிரோ, ஸ்டில் அலமாரி, CCTV Camara, LED பெயர் பலகை ஆகியவற்றை வாங்கி நூலகத்தில் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.5,20,000/- (ரூபாய். ஐந்து இலட்சத்து இருபதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தினை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.318 /2024/இ1 | நகரமன்ற தீர்மானம் எண்,562<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 31.01.2024 | **<u>பொருள் எண். 17</u>**<br>இந்நகராட்சி 2024ஆம் ஆண்டு ஜனவரி 26ம் தேதி நடைபெறும் குடியரசு தினவிழா முன்னிட்டு அலுவலக வளாகம் மின்விளக்கு மற்றும் தோரணங்களால் அலங்கரிக்கவும், ஒலி பெருக்கி வசதி விழா பந்தல் அமைக்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.25000/-ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம் | நகரமன்ற தீர்மானம் எண்,563<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2) மேற்படி பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>ந.க.எண் . 315/2024/இ1 | |
| 31.01.2024 | **<u>பொருள் எண். 18</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பாலாற்று கரையோரம் மயானகொள்ளை திருவிழா மார்ச் மாதம் நடைபெற உள்ளதால் மாவட்ட ஆட்சியர், இராணிப்பேட்டை மாவட்டம் அவர்கள் முன்னேற்பாடுகள் செய்துதர தெரிவித்துள்ள அறிவுரைகளை பின்பற்றி விழா நடைபெறும் பாலாறு பகுதியில் இராணிப்பேட்டை ஆற்காடு சாலையில் பாலாற்றங்கரை ஒட்டி ஆற்றில் இறங்குமிடத்தில் தற்காலிகமாக சாலையை செப்பனிடவும், கழிவறைகள் வசதி, குடிநீர் வசதி மற்றும் மின்விளக்கு வசதிகள் செய்திட தயாரிக்கப்பட்ட செலவினத்தொகை ரூ.1,50,000/-ற்கு(ரூபாய்.ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>(ந.க.எண்.316/2023/இ1) | நகரமன்ற தீர்மானம் எண்,564<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 31.01.2024 | **<u>பொருள் எண். 19</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சியில் மூலதன மான்ய நிதி/இயக்கம் மற்றும் பராமரிப்பு மான்ய நிதி 2023-24-ன் கீழ் ரூ.290.00 இலட்சம் மதிப்பீட்டில் பாலாற்றில் உள்ள நீர் உறிஞ்சு கிணறுகளிலிருந்து இருந்து தலைமை நீரேற்று நிலையத்திற்கு புதியதாக குடிநீர் பிரதான குழாய் மற்றும் கேபிள் பதிக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் ந.க.எண். 1173/2023/இ1 நாள்: 27.11.2023 (ம) மறுஒப்பந்தப்புள்ளி கோர 08.12.2023ஆம் தேதிகளில் அறிவிக்கையினை தமிழ் மற்றும் ஆங்கிலம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்காக BRIGHT ADVERTISING, CHENNAI என்பவருக்கு கட்டணத்தொகை ரூ.39272/- வழங்ககோரி அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் DIPR/6469/TENDER/2023 நாள்16.12.2023 மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) விளம்பர கட்டணத்தொகை ரூ. 39272/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1173/2023/இ1 | நகரமன்ற தீர்மானம் எண்,565<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 31.01.2024 | **<u>பொருள் எண். 20</u>**<br>இந்நகராட்சியில் 26.01.2024 அன்று நடைபெற உள்ள குடியரசுதின விழாவிற்கு அழைப்பிதழ்கள் (250 எண்ணிக்கை) அச்சடிக்க ரூ.10,000/-ற்கு தோராய செலவினம் மேற்கொள்ளவும் விலைப்புள்ளி கோரவும் | நகரமன்ற தீர்மானம் எண்,566 |

<table>
<tr>
<td></td>
<td>நகர்மன்ற தலைவர் அவர்களால் முன்அனுமதி அளிக்கப்பட்டது. அதனடிப்படையில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>பகவான் பிரிண்டர்ஸ், இராணிப்பேட்டை</td><td>ரூ.8750/-</td></tr>
<tr><td>2</td><td>லட்சுமி பிரிண்டர்ஸ், இராணிப்பேட்டை</td><td>ரூ.9500/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
1) மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>
2) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் கண்டுள்ள பகவான் பிரிண்டர்ஸ், இராணிப்பேட்டை என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
3) நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
(ந.க.எண்.252/2007/பி3)</td>
<td>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.01.2024</td>
<td><u>பொருள் எண். 21</u><br>
. இந்நகராட்சியில் 05.01.2024 அன்று நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்டத்தில் இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை கடை எண். 15-னை நடத்தி வந்த திரு.M.சிவலிங்கம் என்பவர் 16.08.2020 அன்று இறந்துவிட்டதால் மேற்படி கடையினை அன்னாரின் வாரிசுதாரரான திருமதி.S.புவனா என்பவரின் பெயருக்கு மாற்றம் செய்து தர கோரி திருமதி.S.புவனா என்பவர் விண்ணப்பம் அளித்துள்ளார். அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.03.07.2007-ல் நகராட்சி கடைகளுக்கு முதல் குத்தகைதாரரின் வாரிசுதாரர்கள் அனைத்து பாக்கி தொகைகளையும் செலுத்துவதன் பேரிலும் நகர்புற உள்ளாட்சி மன்றம் அவ்போது நிர்ணயிக்கும் குத்தகை தொகையை செலுத்த ஒப்புக் கொள்ளும் நிபந்தனைக்குட்பட்டும் அவர்களுடைய பெயரில் குத்தகை உரிமை மாற்றம் பெற உரிமை உடையவராவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி, அரசாணையின் அடிப்படையில் இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை கடை எண். 15-னை திரு.M.சிவலிங்கம் என்பவரின் பெயரிலிருந்து அவரது வாரிசுதாரரான திருமதி.S.புவனா என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<u>அலுவலக குறிப்பு :</u><br>
மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
ந.க.எண்.210/2024/அ3</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,567<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>31.01.2024</td>
<td>
<u>பொருள் எண். 22</u><br>
இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித் திரியும் தெரு நாய்களை பிடித்து கருத்தடை சிகிச்சை மற்றும் வெறிநாய் கடி தடுப்பூசி செலுத்தி இனப்பெருக்கத்தினை கட்டுபடுத்த நகரமன்றத் தீர்மான எண். 546, நாள்.30.11.2023ம் நாளில் அனுமதி பெறப்பட்டது. மேலும், 08.01.2024ம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டமைக்கு 23.01.2024ம் தேதியன்று கீழ் காணும் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>M/s. Prani Mithran, Coimbatore<br>கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய் கடி தடுப்பூசி செலுத்துதல்</td><td>1,450.00</td></tr>
<tr><td>2.</td><td>Dog and Pig Catcher, Madurai<br>நாய்களை பிடித்தல் மற்றும் பிடித்த இடத்தில் கொண்டு சென்று விடுதல்.</td><td>200.00</td></tr>
</table>
அலுவலக குறிப்பு<br>
01. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
02. இந்நகர பொது மக்களுக்கு இடையூராகவுள்ள தெரு நாய்களை பிடித்து கருத்தடை சிகிச்சை மற்றும் வெறி நாய் கடி தடுப்பூசியினை செலுத்தி எந்த இடத்திலிருந்து பிடிக்கப்படதோ இதே இடத்தில் நாய்களை விட மேற்படி நிறுவனதிற்கு அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>
ந.க.எண்.2840/2022/எச்1
</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,568<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.01.2024</td>
<td>
<u>பொருள் எண். 23</u><br>
இந்நகராட்சி எல்லைக்குள் வீடுகள் மற்றுள் வணிக ஸ்தலங்களில் தினசரி உருவாகும் ஒரு முறையே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை (Bailling) கட்டுவதற்கு பேக்கிங் கிளிப் மற்றும் பேக்கிங் ரோல் தேவைப்படுவதால் மேற்படி பொருட்களை வாங்குவதற்கு அதற்காகும் தோராய செலவினத் தொகை ரூ.75000/- ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலககுறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. மேற்படி பொருட்களை விலைப்புள்ளி கோரி வாங்க மன்ற அனுமதி வழங்கலாம்.<br>
3. இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண்.0217/2024/எச்1
</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,569<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>31.01.2024</td>
<td><u>பொருள் எண். 24</u><br>இந்நகராட்சியில் எழுது பொருட்கள் 12A டோனர், 88A Size டோனர், A4 பேப்பர் வெள்ளைத்தாள், Legal Size பேப்பர், கணினிமைய இரசீதுகள், ரிஜிஸ்டர்கள் படிவங்கள், பாரங்கள் பிரிண்டர் டோனர்கள் அரசு கூட்டுறவு அச்சகத்தில் வாங்கி கொள்ளவும் அதற்காகும் தோராய செலவு தொகை ரூ.10,00,000/-(பத்து இலட்சம்) செலவிட மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவு தொகை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4201/2016/பி2</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,570<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.01.2024</td>
<td><u>பொருள் எண். 25</u><br>இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளில் டெங்கு காய்சல் பரவாமல் முன் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கும், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த மகளீர் குழு சுயஉதவிக்குழுக்களை கொண்டு வீடுவீடாக சென்று அபேட் மருந்து தெளித்தல் வீடுகளை சுற்றியுள்ள தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்துதல், முதிர்ச்சி அடைந்த கொசுகளை கட்டுபடுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள DBC பணியாளர்களை நியமித்து மேற்கொள்ளுமாறு துணை இயக்குநர், பொதுசுகாதாரபணிகள், இராணிப்பேட்டை அவர்களின் கடிதம் ந.க.எண்.355/அ2/2020, நாள்.07.07.2022ம் தேதியன்று தெரிவிக்கப்பட்டதற்கு30 பணியாளர்களை கொண்டு தொடர் நடவடிக்கையாக மேற்கொண்டமைக்கு ஜனவரி 2024ம் மாதம் வரை மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.<br><br>எனவே, பொதுமக்களின் நலன் கருதி இப்பணியினை பிப்ரவரி 2024ம் மாதம் முதல் இதே சுயஉதவிக்குழுவின் 30 DBC பணியாளர்களை கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்களின் ந.க.எண்.F4/2369/2022, நாள்.13.05.2022 என்ற செயல்முறை ஆணையில்2021-2022ம் வருடத்தில் தெரிவிக்கப்பட்ட வரிசை எண்.24ல் Mazdoor என்ற பணியிடத்திற்குண்டான தினக்கூலியாக ரூ.315/-என நிர்ணயம் செய்யப்பட்டதை ஏற்று இவற்றுடன் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும் தெழிலாளர் மருத்துவகாப்பீடு சந்தா தொகைகளை செலுத்தி பிப்ரவரி 2024 முதல் ஏப்ரல் 2024 வரை மூன்றுமாதங்களுக்கு கீழ்காணும் விவரங்களின் படி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்க தோராயச் செலவினத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><td colspan="5">DETAILS ON DBC WORKERS EPF AND ESI</td></tr>
<tr><td>WAGES</td><td colspan="2">EMPLOYEERS CONTRIBUTION</td><td colspan="2">EMPLOYEES CONTRIBUTION</td></tr>
<tr><td>2021-22</td><td>EPF</td><td>ESI</td><td>EPF</td><td>ESI</td></tr>
</table>
</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண்,571<br>அலுவல க்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| Perday Wages | 13% | 3.25% | 12% | 0.75% |
| Rs.315.00 | Rs.40.95 | Rs.10.23 | Rs.37.80 | Rs.2.36 |
| Perday Contribution | Rs.51.18 | | Rs.40.16 | |
| Per Day Wages | Rs.366.18 | | Rs.274.84 | |

<u>அலுவலககுறிப்பு</u>

01. மன்றம் அனுமதி வழங்கலாம்.
02. இராணிபேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலியினை ஏற்று 30 DBC பணியாளர்களை கொண்டு டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மேலும் இவர்களுக்கு ஊதியம் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
03. இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1864/2022/எச்1

31.01.2024

**<u>பொருள் எண். 26</u>**

இந்நகராட்சியில் உருவாகும் திடக்கழிவுகளை மக்கும், மக்காத குப்பைகள் மற்றும் அபயாகரமான கழிவுகள் என தரம் பிரித்து மூன்று நுண்ணுரமையங்களில் செயலாக்கம் செய்யப்பட்டுவருகிறது. மேலும், நாளொன்றுக்கு உருவாகும் 1500 கிலோ டயர் மற்றும் நேப்கின்களை கையாலுவதிலும், அப்புறப்படுத்துவதிலும் ஏற்படும் சிரமத்தினை குறைக்க வேண்டி இக்கழிவுகளை எரிப்பதற்க்கு இரண்டு INCINERATOR இயந்திரங்களை வாங்க தோரய செலவினத்தொகை ரூ.5.00 லட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி இரண்டு INCINERATOR இயந்திரங்களை பொறியியல் பிரிவில் விலைப்புள்ளிகள் கோரி வாங்க மன்றம் அனுமதி வழங்கலாம்
3. இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 0058/2024/எச்1

நகரமன்ற தீர்மானம் எண்.572
அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஓம்/ – க. சுஜாதாவினோத்)
நகரமன்றத் தலைவர்,
இராணிப்பேட்டை நகரமன்றம்.